[4th July 1962

டோபிகானா அமைத்தல் (நிதி உதவி)

*116. கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் நகராட்சி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்களுக்கும், நகராண்மைக் கழகங்களுக்கும் டோபிகானா அமைக்க அரசாங்கம் உதவித்தொகை அளிக்கிறதா?

(இ) அப்படியானால், 1961-62-ல் எத்தனை ஊராட்சி மன்றங்கள், நகராண்மைக் கழகங்கள் எவ்வளவு தொகை பெற்றுள்ளன?

THE HON. SRI S. M. A. MAJID: (a) Yes, Sir;

(b) Loans aggregating Rs. 1,40,000 to three Municipalities and Rs. 7,500 to two panchayats were given in 1961-62.

அரக்கோணம் நகரசபை ஆணையர் (புகார்கள்)

*117 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரக்கோணம் நகரசபையின் ஆணையாளர்மீது துண்டுப் பிரசுரமூலமாகவும், மகஜர்மூலமாகவும் வந்த புகார்கள்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

THE HON. SRI S. M. A. MAJID: The complaints are being enquired into by the appropriate authorities.

திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆணையாளர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் நமது முதல் அமைச்சரின் ஊருக்கு பக்கத்து ஊர் என்று சொல்லிக்கொண்டு லஞ்சங்கள் வாங்கிக்கொண்டிருக்கிறார். அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறது?

MR. SPEAKER: The hon. Member should simply put the question and cannot make a speech.

(No reply.)

ஹோமியோபதி வைத்தியமுறை (அங்கீகாரம்)

MR. SPEAKER: Question No. 118.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, the hon. Member who gave notice of this question is not in his seat.

MR. SPEAKER: As the hon. Member who gave notice of question No. 118 is not in his seat the question and answer will be printed in the proceedings.

*118 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹோமியோபதி வைத்திய முறையை இந்த அரசாங்கம் அங்கீகரித்துள்ளதா?

(இ) ஹோமியோபதி டாக்டராக பணியாற்றுவதற்கு ரிஜிஸ்ட்ரேஷன் முறை உண்டா?

4th July 1962]

(உ) ரிஜிஸ்டர் செய்துகொள்வதற்குரிய நடைமுறைகள் என்னென்ன?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes, Sir;

(b) None at present; and

(c) Does not arise.

Drainage scheme for Kandaparichan canal

*119 Q.—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) when the drainage scheme for Kandaparichan canal in Tiruthuraipundi taluk, Thanjavur district, was launched;

(b) the amount sanctioned for the scheme:

(c) whether the scheme has been completed; and

(d) if not, the reasons therefor?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) கொந்தப்பரிசான் ஆற்றுக்கு குறுக்கே அணை கட்டும் திட்டமானது 1958-ம் ஆண்டு எப்ரல் மாதம் துவக்கப்பட்டது.

(இ) இதற்கு எஸ்டிமேட் ரூ. 4,82,400.

(உ) இல்லை. 30—6—1962-க்குள்ளே இதை நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருக்கிறது.

(எ) ஜாம்பவான்ஓடை வில்லேஜில் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால்தான் காலதாமதம். அது இன்னும் முடியவில்லை. அதுதான் முக்கியகாரணம். இருந்தாலும், 'குலோஷர் பீரியடிற்குள்' இதை முடித்து நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் கூறிய தகவலிலிருந்தும், எனக்கு கிடைத்திருக்கக்கூடிய தகவலிலிருந்தும், கால்வாய் சம்பந்தப்பட்ட மட்டில் வெட்டி பூர்த்தியாகி 7 ஆண்டு காலமாகிவிட்டதே, வடிகால் வெட்டுவதற்குத்தான் காலதாமதம் ஆகிறது. ஜாம்பவான்ஓடையில் வடிகாலுக்குத் தேவையான நிலம் மிகவும் செல்வாக்குள்ளவர் கையில் இருப்பதினுல், 7 ஆண்டுகள் தாமதம் ஆகி, 2,000 ஏகர் மகசூல் நஷ்டம் அடைகிறது என்பது உண்மையா?

கனம் திரு. பூ. கக்கன் : செல்வாக்குள்ளவர் கையில் நிலம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. இருந்தாலும், எவ்வளவு செல்வாக்குள்ளவர் நிலமாக இருந்தாலும், அதை ஆர்ஜிதம் பண்ண அரசாங்கம் பின்வாங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சம்பந்தப்பட்ட நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்காக இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன என்று அறிவிக்க முடியுமா?